கேட்டார். ஆனால் நான் கேட்பது, அந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கு அரசு மானியம் வழங்கப்படுகிறதா? அது எவ்வளவு வழங்கப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி எத்தனை நகைக் கடன்கள் கொடுக்கின்ற சங்கங்களுக்குள்ளில் சேமிப்பு அறையுடன் கூடிய அலுவலகக் கட்டிடம் உள்ளது என்பதாகும். எனவே மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் சேமித்து இந்த மன்றத்தில் வைக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நகை சேமிப்புள்ள கூட்டுறவு சங்கங்கள் கட்டிடங்கள் கட்டித்தர வேண்டும் என்று நீண்டகாலமாக கோரிக்கைகள் வந்தும் கூட இன்னும் அரசு அதற்கு அனுமதி அளிக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அந்தக் கோரிக்கை வைத்துள்ள நகை சேமிப்பு சங்கங்களுக்கு உடனடியாக கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்திலே இருக்கிற 4742 விவசாயக் கூட்டுறவு சங்கங்களில், 839 சங்கங்கள் மட்டுமே நகைக்கடன்கள் வழங்குகின்றன. அதிலும் இன்றைய தினம் 415 சங்கங்களில் மட்டுமே இந்த சேமிப்பு அறைகள் இருக்கின்றன. மிகுதி இருக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கு அரசு இன்று ஒரு மாற்று ஏற்பாடு செய்து இருக்கிறது. ஏற்கனவே நகைக் கடன்கள் வழங்கி வரும் மற்ற சங்கங்களுக்கும், நகைக் கடன்கள் புதிதாக வழங்க முன் வரும் சங்கங்களுக்கும், ஒரு சங்கத்திற்கு ரூ. 3,300 வீதம் இழுப்பறை, தராசு, எடைகளுடன் கூடிய சேமப் பெட்டி வாங்கும் பொருட்டு நிதியுதவி வழங்க தமிழ் நாடு அரசு திட்டமிட்டுள்ளது. 1978–79–ல் 150 சங்கங்களுக்கு ரூ. 5 லட்சம் கடனாக நிதியுதவி அளிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஐந்தாண்டுத் திட்ட மத்தியில் சுமார் 1000 சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கற்குன்றுகள்

*வினா எண். 605—திரு. வீ. சின்னய்யா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 42 குவாரிகள் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் அரசு வருவாய் இழந்து

1979 ஏப்ரல் 2]

வருவதும் மேற்படி குவாரிகள் கனிவளங்கள் சட்டத்திற்கு புறம்பாக ஒரு சிலரின் சுரண்டலுக்கு ஆளாகி வருவதும் இந்த அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் முந்தைய புதுக்கோட்டை சமஸ்தானத்தினால் 44 கற்குன்றுகளில் கல்லுடைக்கும் உரிமையோடு திருகோகர்ணம் மற்றும் அடப்பைக்காரன் சத்திரத்தைச் சேர்ந்த 70 குடும்பங்களுக்கு மேற்படி ஊர்களில் உள்ள கோவில்களில் இறைபணி செய்வதற்கு ஈடாக மானியமாக அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்த மானியங்களை அரசு மேற்கொள்ள தகுந்த சட்டம் இயற்ற ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

புள்ளம்பாடி விவசாயத்திற்குக் கூடுதல் வரி

*வினா எண் 606—திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடியில் 22—1—1979 அன்று புள்ளம்பாடி வாய்க்கால் விவசாயிகள் 4,000 பேர் அவர்களுக்குக் கூடுதலாக விதித்துள்ள வரியை ரத்து செய்யக் கோரி விவசாயிகள் பேரணி நடத்தியது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இதன் பேரில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) விவசாயிகளின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமானூர் ஒன்றியத்தைச் சேர்ந்த கிராமங்களில் புள்ளம்பாடி வாய்க்கால் இரண்டாம் தர வாய்க்கால் என்ற அடிப்படையில் வரி வசூல் செய்யப்படுகிறது? அதை முதல் தர வாய்க்காலாக கட்டித் தரவேண்டும். மேலும், வரியைக் குறைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது. முதல் தரமான வாய்க்கால் தமிழ்நாட்டில் எங்கேயும் இல்லை.